செ.வெ.எண் : 06/ஆகஸ்ட் நாள்:07.08.2020

# இராமநாதபுரம் மாவட்டம்

## கால்நடை பசுந்தீவன வளர்ப்புக்கு அரசு மானியம்
## மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

கால்நடைகளின் உற்பத்தி திறனுக்கு தீவனம் மற்றும் பசுந்தீவனம் மிகவும் இன்றிமையாதது ஆகும். அதன்படி, கால்நடை வளர்ப்போர் பசுந்தீவனம் உற்பத்தி செய்வதை ஊக்கப்படுத்தும் வகையிலும் தமிழக அரசு கடந்த ஒன்பது ஆண்டுகளாக மாநில தீவன அபிவிருத்தி திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. மேலும் விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்போர் பயன்பெறும் வகையில் கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் நடப்பு (2020-21) நிதியாண்டில் அரசு மானியத்துடன் கூடிய கீழ்க்கண்ட தீவன பயிர் சாகுபடி திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

அ) இறவையில் (Irrigated Condition) 50 ஏக்கர் பரப்பில் தீவனச்சோளம் (CoFs29/CSV 33MF ) மற்றும் காராமணி (Legume Cowpea) காராமணி (Desmanthus) தீவனப்பயிர் சாகுபடி செய்திட தீவன நாற்றுகள் இலவசமாக வழங்கப்படுகிறது. கால்நடை வளர்ப்பவராக இருந்து குறைந்தபட்சம் 0.25 ஏக்கர் அதிக பட்சம் 1 ஏக்கர் பரப்பில் இறவையில் தீவனப்பயிர் சாகுபடி செய்ய பாசன வசதி உள்ளவராக இருத்தல் வேண்டும். மேலும், இதற்கு முன் இச்சலுகையை பெற்றவராக இருத்தல் கூடாது.

ஆ) தீவன விதைப்பைகள் வழங்கும் திட்டத்தில் 20 ஏக்கர் பரப்பில் Co (Fs) 29/Co 31 விதைகளுடன் காராமணி தீவனப்பயிர் சாகுபடிக்காக குறைந்த பட்சம் 10 செண்ட் நிலத்திற்கு வழங்கப்படும். மூன்று மற்றும் நான்கு வகையான தீவன விதைகள் ஒரே இடத்தில் பயிரிடப்பட்டு பசுவினங்களின் சத்துக்களை சமன்படுத்தும் விதத்தில் அமைக்கப்படும்.

இ) மானாவாரியில் (Rainfed condition) தீவனச் சோளம் மற்றும் தீவன தட்டப்பயிறு (Sorghum and Cowpea ) 500 ஏக்கர் பரப்பில் சாகுபடி செய்திட தீவன விதை இலவசமாக வழங்கப்படுகிறது. விவசாயிகள் சொந்தமாக பால் மாடுகள் வளர்ப்பவராகவும் ,இறவை வசதி இல்லாத நிலம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும். அதிகபட்சமாக ஒரு விவசாயிக்கு 2 ஏக்கர் நிலத்திற்கான மானியம் வழங்கப்படும். விலையில்லா திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கறவைப்பசுக்கள் வைத்திருக்கும் பயனாளிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

ஈ) புல் வெட்டும் கருவி 2 எண்ணம் விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்தில் வழங்கப்படவுள்ளது.

உ) எல்லா இனங்களிலும் 30% தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இனத்தவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். மேலும் குறுவிவசாயிகள் , மற்றும் ஆவின் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்

மேற்காணும் திட்டங்களின் மூலம் பயன்பெற விருப்பமுள்ள கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் தங்கள் பகுதியிலுள்ள கால்நடை உதவி மருத்துவரை நேரில் தொடர்பு கொண்ட பயன்பெறலாம்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**